உ

சிவமயம்.

# அன்னதானம்.



இது

பண்டிதரத்தினம்,

குகஸ்ரீ-புழலை-திருநாவுக்கரசு முதலியாரவர்களால்

(DISTRICT BOARD MEMBER, CHENGLEPUT DIST., AND HONORARY MAGISTRATE, SEMBIAM.)

இயற்றப்பட்டு,

கும்பகோணம்,

மாமக அன்னதான சமாஜத்தாரால்,

சென்னை:

பென்ரோஸ் கம்பெனியில் பதிப்பிக்கப்பட்டது.

1921.

உ

சிவமயம்.

# முகவுரை.

அறிவானுன்று தெருளானேங்கி அருளானிறைந்த பெரியீர்!

வேதாகமங்களிற் சிறப்பித்துக் கூறப்படும்பெருமைவாய்ந்த "அன்னதானம்" என்னும் விஷயத்தைக் "கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேன்," கற்றறிவுமுற்றவுடைய உங்கள் முன்னிலையில் "கல்லாதவரு நனிநல்லர் கற்ருர்முன் சொல்லாதிருக்கப் பெறின்." என்னுந் தேவர் திருவாக்கையுஞ் சிந்தியாது புகுதல் எள்ளற்பால தெனக்கொள்ளாது இயம்பற்பால தெனக்கொண்டு வெளிப்படுத்த முன்வந்தது என்னை கொல்லெனின் "அறையுமாடரங்கும் மடப்பிள்ளைகள், தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ, இறையு ஞான மிலாதவென் புன்கவி, முறையினூ லுணர்ந்தாரு முனிவரோ." எனக்கம்பர் இராமாயணத்துட் கூற மதுகடைப் பிடித்து அறிவானுன்ற பெரியீராகிய நீவிர் அறிவறை போகிய முழுமகனுகிய எனது சொற்குற்றம், பொருட்குற்றங்கண்டு முனியாதொழிவீர் என்னுங் கருத்துப்பற்றியும், "கொஞ்சிப் பேசுங் குழவிச்சொற் குற்றத்தால், வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில், நஞ்சிட்டா லதைநாடி விலக்குநல், நெஞ்சத் தாருள ரோவிந் நிலத்திலே." என வீரகவிராசர் விளம்பியபடி அபிமானப் புத்திரனுகக் கொண்டு என் மீது குற்றம் பாராட்டாது குணமாகக்கொண்டு கோதாட்டுவீர் என்னுங்கருத்துப் பற்றியுமேயாம். ஆகலாற், "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண், மிகைநாடி மிக்ககொளல்" என்ற வண்ணமே குணங்கொண்டு குற்றங்களைந்து எள்ளாது கொள்ளுவீர்கள் என்று நம்புகின்றேன். அதுநிற்க:— அன்னதானமே பெரிதாக்கொண்டிருந்த அருமருந்தன்ன சைவத்திருவாளர் - புழலை - முனிசாமி முதலியாராகிய என்னருமைத் தந்தையார் ஞாபகார்த்தமாக என்றும் மறவாச் சிந்தனையோடு இச்சிறு சுவடியை அதிவிநயத்துடன் அவர்கட்குச் சமர்ப்பிக்க மிக்க ஆவலுடையவனுகிறேன்.

செம்பியம், 10-12-20.

பு. தி.

# வித்துவாபிப்பிராயங்கள்.

## யாழ்ப்பாணம்-வண்ணைநகர்.

## ஸ்ரீலஸ்ரீ - சுவாமிநாதபண்டிதரவர்கள்.

அன்னதானம் எனப் பெயர்கொண்ட இப்புத்தகத்தின் விஷயம் முற்றும் யான் படித்துப்பார்த்து அகமிக மகிழ்ந்தேன். இது, மானிடப்பிறவி, தானம், அன்னதானம், பசிப்பிணி, அருள், செல்வநிலையாமை, யாக்கைநிலையாமை, ஈகை, வினைவழி, வழித்துணை, முடிபு என்னும் பன்னிருபாகு பாட்டினையுடையது. ஒவ்வொரு விடயமும் இலகுவான வசன நடையில் நன்றாக எழுதப்பட்டுப் பற்பல நூற்பிரமாணங்களால் மிகவிளக்கப்பட்டது.

கடும்பற்றுள்ளமுடைய கன்னெஞ்சரும் இதனைக் கற்கப் பெறுவராயின், நன்னெஞ்சராய் உலோபத்தை ஒழித்து அன்னதானஞ் செய்யத் தந்நெஞ்சகத்துன்னுவர் என்பதொருதலை.

அன்னதானமாகிய அரும்பெருந் தருமமும் நாளுக்குநாள் அருகிவரும் இக்காலத்து இதுபோன்ற நூல்கள் அத்தியாவசியம் வேண்டப்படுவனவேயாம்.

இவ்விதமான நூல்களைப் பரோபகாரமாக இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்துங் கருணையாளர் அட்டைசுவரியங்களையும் பெற்றுப் பூரணாயுளோடிருந்து உலகிற்குப் பயன்படுமாறு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் பேரருள் புரிவாராக.

## சித்தாந்தம் பத்திராதிபர்

## ஸ்ரீமத்-கி-குப்புசாமிமுதலியார் அவர்கள்.

நமது நண்பர் சைவத்திருவாளர் - பண்டிதரத்தினம் குகஸ்ரீ - ப்புழலை - திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் அன்னதானமென்னும் விஷயத்தைப் பன்னிருபாகு பாடாக வகுத்துயாவருமெளிதிலுணருமாறு பற்பலநூற் பிரமாணங்களினானன்கு விளக்கி ஓர் நூல் வெளிப்படுத்தியுள்ளார்கள். தான மிதுவென அறிய விரும்பும் இல்லறத்தார் பலரும் இதனை வாசிக்கவேண்டும்.

சிவமயம்.

# அன்னதானம்.

காப்பு-வெண்பா.

தானத்துண் மேலாய தானமெனச் சாற்றுமன்ன
தானத்தைப் பேதையேன் சாற்றுதற்குத்—தான
வருவி பொழிகடத் தத்திமுகத் தண்ணல்
பொருவி லருடருவன் போந்து.

## மானிடப் பிறவி.

எல்லாம் வல்லஇறைவன் அருட்டன்மையால் உண்டாகும் நால்வகைத் தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களுள்ளே மானிடப்பிறப்பே விசேடித்ததாகும். இது சிவஞான சித்தியார், "அண்டசஞ் சுவேத சங்களுற்பிசஞ்சராயு சத்தோ, டெண்டரு நாலெண்பத்து நான்கு நூறுயிரத்தா, னுண்டுபல் யோனியெல்லா மொழித்து மானிடத்துதித்தல், கண்டிடிற் கடலேக்கை யானீந்தினன் காரியங்காண்." என்றும், தணிகைப்புராணம், "அரிதாம் பிறப்பு ளுயர்மானிடத்தினடைவுற்று வைகல்"—என்றும், வில்லிபாரதம், "உற்ற யோனிகடம்மினுற்பவியாமன் மானுட வுற்பவம், பெற்றுவாழுதலரிது"—என்றும், பிரபுலிங்கலீலை, "வண்மைகொ ணிலமிசை மக்களாகுதனன்மைகொ ளுயிர்க்கலா லரிது நந்தியே". " என்றும் "பீடுறுமானிடப் பிறப்பு வாய்த்ததும்" என்றும், வளையாபதி, " நணிபல பிறவி தம்முட் டுன்புறாஉம் பல்லுயிர்க்கு, மனதரினரிய தாகுந் தோன்றுதல்" என்றும், சிந்தாமணி, " அரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" என்றும், வள்ளலார் சாத்திரம், "மக்களாக்கையிற் பிறத்தலே யரிது"—என்றும், சிவதருமோத்

தாம், 'அரிய மானிடயாக்கை யடைந்தபின்''-என்றும், பட்டணத்தார்பாடல், ''திருமால் பயந்த திசைமுக னமைத்து, வருமேழ் பிறவியு மானுடத் துதித்து,'' என்றும், கூறுதலால் நன்கு விளங்கும், இவ்வரிய மானிடத் தாரனைவரும்கல்வி கேள்விகளாற் பகுத்தறியத்தக்க அறிவைப் பெற்று இப்பிறப்பிலேயே அடையத்தக்க பிரயோசனத்தை அடையவேண்டும். அது எல்லா வுலகங்களையும், அவ்வுலகங்களு ளடங்கிய இயங்குதிணை, நிலைத்திணையாகிய எல்லா வுயிர்களையும் திருவருட் சத்தியைத் துணைக்காரணமாகக்கொண்டு வினைப்பயனை நுகர்வித்து முத்தியிற் சேர்க்கும். இறைவன் திருவடியைப் பெறுதலே அப்பிறப்பாலாகிய பெரும் பயனாகும். மானிடர்கள் தத்தம் பகுத்தறிவிற் கேற்றவாறு விதிவிலக்கின்படி காரியங்களை நிருவகித்து வருகிறார்கள். அப்பகுத்தறிவிற் கேற்றபடி அபிப்பிராயங்கள் அமைகின்றன, பகுத்தறிவில்லாதவர்கள் செய்யும் செயல்களெல்லாம் மிருகம் பட்சிமுதலியவற்றின் செயல்களை யொத்திருக்கு மென்பர். ஜீவராசிகள்தத்தம் இனத்தின் பொதுலட்சண முடையனவாயிருக்கும் இயற்கையறிவிற் கேற்றபடி கருமங்களைச் செய்து வருகின்றன. மேலாகக் கூறும் மானிடப் பிறவியும் புவியின் கண்ணுள்ளது. சுவர்க்க மத்திய பாதல மென்னும் திரிலோகங்களுள்ளும் நல்வினைப் பயனாகிய இன்பத்தை மேலேயுள்ள சுவர்க்கத்திலும், தீவினைப்பயனாகிய துன்பத்தைக் கீழேயுள்ள நரகத்திலும் சென்று அனுபவித்து எஞ்சிய வினைப்பயன்களி ரண்டையும் அநுபவித்துத் தொலைத்துச் சிவனையருச்சித்து முத்தி யடைவதற்கு மீண்டும் புவியில் வந்து தோன்றுத லுண்மையாதலினாலும் சுவர்க்க வாசிகளாகிய தேவர்களும் புவியிலே வந்து இறைவனை யருச்சித்துப் பேறுபெறுதலாலும் புவியேவிசேட முடைத்தென்பர். மண்ணவர்கள், இம்மை மறுமை, வீடு என்னும் மூன்றுபயன்களையும், விண்ணவர்கள், மறுமை, வீடு என்னு மிரண்டு பயன்களையும், பண்ணவர்கள், வீடு என்னும் ஒருபயனையும் அடைவரென்று தனியூர்ப்புராணம் கூறும். சிவஞான சித்தியார், ''மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத் தானிடத்தைந்து மாடுமரன் பணிக்காக வன்றோ, வானிடத் தவருமண்மேல் வந்தரன்றனையர்ச்சிப்பர், ஊனெடுத்

துழனுமும ரொன்றையு முணரா ரந்தோ" என்றும், திருவாசகத்தில், "புவனியிற் போய்ப் பிறவாமையினுணும் போக்குகின்றேமவமே யிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கித் திருப்பெருந் துறையுறைவாய் திருமாலாம், அவன் விருப்பெய்த வுமலரவனுசைப் படவு நின்னலர்ந்த மெய்க்கருணையு நீயும், அவனியிற் புகுந்தெமையாட் கொள்ள வல்லா யாரமுதே பள்ளியெழுந் தருளாயே." என்றுங் கூறப்படுதலால் அடையக்கூடிய எல்லாப் பிரயோசனங்களையும் இப்பிறவியிலேயே அடைய வேண்டும். அங்ஙனம் அடைவதற்கு இன்று நாளை என்று காலங்கழிக்காது உடனே முயலவேண்டும். ஸ்ரீ தாயுமானவர், "இப்பிறவிதப்பினுலெப்பிறவி வாய்க்குமோ வேதுவருமோ"—என்றும், சிலப்பதிகாரம், "கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன வொருங்குடனில்லா வுடம்பிடை யுயிர்கள்"—என்றும் கூறப்படுவனவற்றை நன்குணர்ந்து திருவருளை முன்னிட்டு தானதருமங்களைச் செய்து உய்திபெறல்வேண்டும்.

---

## தானம்.

அங்ஙனம் உய்தி பெறுவதற்குச் சாதனமான புண்ணிய வகை நான்கு அவை தானம், கல்வி, தவம், ஒழுக்கம் என்பனஅவற்றுள் முதற்கண் உள்ளதானம் இருபத்தைந்து வகைப்படும் அவை அன்னதானம், பூதானம், கோதானம், வித்தியாதானம், கன்னிகாதானம், சுவர்னதானம் முதலியனவாம் அத்தகையதானம் தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் என மூவகைப்படும். நல்வழியிற் சம்பாதித்த பொருளைச் சிவஞானச் செயலுடையாரை வற்புக்கொள்ளுமாறு குறையிரந்து உள்ளன்போடு கொடுத்தல் தலைப்படுதான மென்றும், ஆதுலர், குருடர், செவிடர், முடவர், மாதர் முதலியோர் சிறுமையை நோக்கி மனமிரங்கியீதலே இடைப்படுதான மென்றும், புகழ், பகை, பகைவரச்சம், கண்ணோட்டம், பட்சம், மரியாதை, காரணம், கடைப்பாடு, இழிவு, தீர்மானம் இவைகளை முன்னிட்டு ஈதல் கடைப்படுதான மென்றும் கூறுவர். ஸ்ரீ காமாட்சியம்மையால் வளர்க்கப்பட்ட முப்பா

னிரண்டு அறங்களினுள்ளே முதற் கண் 'ஆதுலர்க்குச் சாலை' என்றெடுத்தாண்டுள்ளார்கள். (அதாவது ஏழைகட்கு அன்ன மளிக்குமிடம்)

---

## அன்னதானம்

அத்தகைய அன்னதானம் மிக மேம்பாடுடையதாகும். திருக்காளத்தி புராணம், "தானமிங் கெவற்றுள்ளு மன்னதானமே மேன்மை யததனை யீண்டிழைத்த வித்தகன், வானவர் வளநகர் வாழ்வெஞ் ஞான்றினு, மானவனவன் பெறுமின்பமார் சொல்வார்." என்றும், சூதசங்கிதை, "அன்னதானந் தனக்கு மேலான தான மில்லை கோற, லன்னமேனும் விரும்பாத தவத்தின் மேலாந் தவமில்லை, பன்னு தெய்வங்களுண் முக்கட்பகவன் மேற் றெய்வ மில்லை, மன்னுதவத் தீரிவை போலம் மனுவின் மேலான மனுவில்லை." என்றும், சிவதருமோத்தரம், "அன்னதான மறைந்த வற்றுளதிகபலமே யருந்தினனுக்கின்னல் கெடுக்குமப் பொழுதே யின்பந்தனையு மிசைவிக்கும், மன்னுமுடலுள் வலியதனுன் மாறில் பொருளேயஃததனு லென்னினு மவையிதற் கில்லை மண்ணிற் கண்ணே வெவ்விடத்தும்." என்றும், காசிரகசியம், "அன்னதானம் மருங்கலதானநற் சொன்ன தானந் தொகுபசுந் தானமு, னென்னதானமும் வேதியர்க் கீந்தனன், கன்னிதானக்களிறுடையண்ணலே." என்றும், திருக்கோயிலூர்ப்புராணம், "புரையுறு தானங்கள் புகல்பலவற்றுள்ளும், விரைகமழ் அன்னதானமே மேம்படு திறம்போல்" என்றும், நீதிசாரம், 'கரிபரி யாயிரங்கள் கனத்தகோ தானம் பூமி, பரிவொடு ரசிதஞ் சொன்ன பாத்திரம் பண்பா மென்று, மிருகுல மொத்த கன்னி கோடிதானிருந்திட்டாலும் அரிதிது வொன்றே யன்னதானமே யதிகமாகும்." என்றும், திருக்குற்றாலப்புராணம், "பூதானம் பரிதேர்யானை பொன் வெள்ளி விளைவுகன்னி, காதானந்தயில மெள்ளுக் கலைபணி யடிமை யில்லங், கோதான மன்ன தானங் கூறுமெண்ணிரு தானத்தி, னேதான பலனுமன்ன மிட்டுண்பார்க் கருளுமிவ்வூர்." என்றும், திருக்கழுக் குன்றப் புராணம், "அன்னதான நல்குவார் சிவபதத் தணவுவார்."

என்றும், கூறுதலினால் அன்னம் பசித்துயரத்தைப் போக்குவதன்றிச் சுகத்துக் கேதுவாகிய சரீரபலத்தையும் நிலைபெறுத்தலால் அன்னமே ஒப்பிலாத பொருள். இப்பூமியின்கண் மாத்திரமேயல்லாமல் எவ்வுலகத்தினும் இதற்கு மேலாகச் சொல்வதற்கில்லை. அன்னத்திலிருந்து இரத்தமும், இரத்தத்திலிருந்து தசையும், தசையிலிருந்து சுக்கிலமும், சுக்கிலத்தினால் கருப்பந்தரித்து சரீரமும் உண்டாகும். அன்னமில்லையாயின் உயிரிருந்துவாழும் உடலில்லை. ஒளவைக்குறள், "அன்னத்தாலாயவுடம்பின் பயனெல்லா முன்னோனைக் காட்டிவிடும்." என்றும், அறிவானந்த சித்தியார், "அன்னமயங்கொண்டெடுத்தவுடல்" என்றும் கூறுதலால் உடலினை யுண்டாக்கி யுடலைக்காப்பது அன்னமே யென்பர். மானிடரேயன்றிதேவரும் விரும்புவது அன்னம். அதுவே பசி நோய்க்கு மருந்தாகும். தேவர், முனிவர், இருடிகள், அசுரர் முதலானவர் தமது சரீரமழியாமலிருக்க அன்னமாதிய வுணவினை யருந்துவார்கள். உலகின்கண் அன்னத்தைக் கை விட்டவர் எவர். துக்கத்திற்குக்காரணமாயுள்ள தேகத்திலுண்டாகும் எல்லா வியாதிகளினும் பசிநோய் மிகப்பொல்லாதது. அருளைப்பெற்றோரும் அன்னத்தின் பொருட்டு அந்தோ! அந்தோ! என்றிரங்குவார்கள். அப்பசி நோய்க்கு மருந்து அன்னமேயாகும். அன்னதானஞ் செய்வோமாகில் பசிநோய் நீங்கி உயிர்கள் உடம்புகளோடு வாழும். அந்தவுயிர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடையும். பசி உயிர்வேதனையினுன்றென்பர். ஆதலால் அன்னதானஞ் செய்வோர் பிராணதானஞ் செய்வோராவர். அன்னதானஞ் செய்வோர் இம்மைக்கண் பொன், மணி, ஆபரணம் முதலிய வேண்டுவனயாவும் எளிதில் அடையப்பெறுவர். வானுலகத்து முத்தியும் அடைவர். அரியதபோதனர்கட்கு அன்னம்படைத்தோர், அவர் தம் தவப்பயனில் பாதியடையப்பெறுவர். அன்னம் சரீரத்தை யுண்டாக்குமேலான காரணமாயிருப்பதால் அன்னத்திற்கு நிகராகச் சொல்வதற்கு வேறொன்றுமில்லை. பூமியில் பிள்ளைகட்கு மாதா எப்படியோ அப்படியே அன்னம் சரீரத்திற்குக் காரணமாயுள்ளது. மச்ச புராணம், "தத்தமந்திரத்தான்-முரைத்திடுமன்னமே பிரமம்" என்றும், "அன்னமே பிராணனன்

னமே பூத மன்னமே வருத்தனையாகு மன்னமே செல்வமன்னமே முகுந்தனுதலாற் றனியமாக" என்றும், அன்னம் உலகம்படைக்கும் அயனென்றும், உலகத்தைக்காக்கும் அரியென்றும், உலகத்தைத்துடைக்கும் அரனென்றும் அருமறைகளிற் கூறப்பட்டிருக்கிறது. யாவற்றிற்கும் இதுவே முதலாகும். அன்னம் விசிட்டதான மொன்பதிலொன்றாகும். சைவசமயநெறி, "பந்தமறுக்கும் பசுபதி தன் பத்தர்க்கு, மந்தணர்க்கு மூட்டுகவன்னம்." என்பதினாலும், மதிசூடும் அண்ணலார் அடியார் தமக்கும் மற்றையோர்க்கும் அன்னமளிப்பது விசேடமாகும்.

---

## பசிப்பிணி.

எவ்வாற்றானும் ஆதரவற்ற ஏழைகட்குப் பசி யென்னும் பிணியை நிவர்த்திசெய்தற்கு அன்னம் அளித்தலே அன்னதானம் எனப்படும். அதன்பயன், திருக்குறள், "அற்றாரழி பசியாற்ற லஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி" என்றும், "பாத்தூண் மரீஇயவனைப் பசியென்னுந் தீப்பிணி தீண்டலரிது." என்றும் கூறுதலால் அறிக. உலகமெலா மொருகுடைக் கீழாளுமரசனும், யாவரையும் வெல்லவல்ல சுத்த வீரனும், மூவாசையுமற்ற ஜீவன் முத்தனும் பசிநேரிட்டபோது மனமிளைத்து, வலிகுறைந்து, அனுபவந்தடைப்பட்டு வருந்துவார்களென்றால் ஏழைகட்குப் பசி நேரிட்டபோது என்ன பாடுபடுவார்களென்பதைப் பகுத்தறிய வேண்டும். பசியதிகரிக்குமானால் முகம் புலர்ந்தும், உச்சி வெதும்பிப் பிரமமந்திரம் அடைப்பட்டும், காது செவிடுபட்டும், கண்பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்தும், நாசியுழன்று கலைமாறி பெருமூச்செறிந்தும், குரல் கம்மியும், மெய் கருகிச் சக்தியற்று ஸ்மரணைகெட்டும், வாய் குழறியும், கைகால் துடித்துத் தடுமாறியும், மலஜலவழி வெதும்பி வேறுபட்டும், உரோமம் வெறிந்தும், பற்கள் கருகித்தளர்ந்தும், இரத்த ஜலம் சுவறியும், சுக்கிலம் தன்மைமாறி வற்றியும், நாடி நரம்பு வலியிழந்து மெலிந்து கட்டுவிட்டும், வயிறு பகீரென்றும், மனந்தளர்ந்து நினைப்புமாறியும், புத்திகெட்டு நிலைமாறியும், பெலங்குறைந்து அச்சமுற்றும், பிர கிருதி

சுருங்கியும், ஆன்ம விளக்கம் மறைப்பட்டும்போகும். இவ்வளவு அவத்தைகட்கும் இடந்தருமென்பர். பஞ்சதந்திரம், "வறுமைப் பசியால் யாசிக்க வருமவர் தமக்கு மாவி, யிறுமவர் தமக்குஞ் செய் யுமியற்கை யொன்றுமே தென்னில், உறுதிபோம் கைகால் சோரு முள்ளமு நடுங்கு மெய்யுங் குறுகியே விலவிலக்குங் குழறும் வாய றிவுபோமே." என்பதனல் ஆகார முண்டு பசி நீங்குந் தருணத் தில் தத்துவங்கள் எல்லாந் தழைத்து ஆன்ம விளக்கம் முற்றிலும் வெளிப்பட்டுத் திருப்தியுண்டாகிறது. ஆதலால் நாம் அனைவரும் ஆதரவற்ற ஏழைகட்குப்பசி நேரிட்டபோது முன்பின் யோசியா மல் மிகவும் இரக்க முள்ளவர்களாய் நம்மாற் கூடியமட்டில் அப் பசிப்பிணியை நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்மலாப மென்றுணரவேண்டும். அன்னம் முத்தொழிற்குங்காரண பூதமாய் எவற்றிற்கும் முதலாய் நிற்குமென்று வேதத்திற்கூறும். அன்னம் ஜீவனென்று ஆகமத்திற் சொல்லும், முண்டகோப நிடதம், " அன் னம் பிராணன், மனஞ் சத்தியம், உலகம் கருமத்தாலாம்பலாதி,' என்றுரைக்கும் காரணம் பற்றியே அன்னமயம் பிராணமயமென் பார். ஆகவே பசிநோய் மிகக் கொடியதிலுங் கொடியதென்பதில் ஐயமில்லை. தணிகைப்புராணம், "பிணிபலவவற்றுண்மேலாம் பிணி பசியதன்பாலன, பிணிநறுந் தெண்ணீர் வேட்கை பிணியவை யுயிர்கட்கெல்லாம், தணிமருந் தன்னந் தெண்ணீர் சார்பசி யொழி வினுண்டாந், தணிவில் பல் வேட்கை நீக்குமவையெலாந் தமக்கு பின்னும்." என்றும், நல்வழி, "மானங் குலங்கல்வி வண்மையறி வுடைமைதானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்து போம். என்றும், தனியன், "தேங்குபுக ழாங்கூர் சிவனேவல் லாளியப்பா, நாங்கள் பசித்திருக்க ஞாயமோ—போங்காணும், கூறுசங்குடோன் முரசு கொட்டோசையல்லாமற், சோறுகண்ட மூளியார்சொல்." என்றும், கந்தபுராணம், " நாணினிச் செய்வ தென்கொன 'லிவது பசிநோ யென்ன." என்றும், "ஆகத்தை வருத்துகின்ற வரும் பசியவித்தாய் தெண்ணீர்த், தாகத்தை யவித்தாயின்னுந் தளர்ந்தில தளர்ச்சிமன்னோ" என்றும், உபதேசகாண்டம், "பழ மறைக் குல முதித்தனனிவன் பரிவினு, லுழு தொழிற்பரிசு பெற்

ஞெழிகலான் வறுமைநோ, யெழுமருப்பொரு கரும்பகடுளானித ஊயப், பொழுதுவிற்குது மெனப்பசியொடும் போயினுன்." என் றும், பிரமோத்தரகாண்டம், "வெப்பினுலுறு பசியினுன் வனத்திடை மெலிந்தேன்" என்றும், சிவரகசியம், "மனங் கண்டான் மூர்ச்சை தீர்ந்தான், றுன்னு பசியாலதனை வாயில் வைத்துச்சுவைகண்டான்" என்றும், "கூடுபசியால் வருந்தி விறகு சும்மைகொண்டுத மொற்றமுடன் குறுகினுளால்" என்றும், "அடுத்த சன்மங்கடொறு மிவனரும் பசிப்பிணியாற், படுத்த துன் பங்கள் பட்டதல்லா லின்பமிலேன்." என்றும், விருத்தாசல புரா ணம், "தாயிழந்து தமரிழந்து தாரமிழந்தரும் பசியாற் பேயனுய்த் தவமுயலாப் பித்தனுய்த்திரிவேற்கு" என்றும், "மணவாளன் பசிக்குதவாள் வஞ்சித்தான் முன்புண்பாள்" என்றும், நீதிவெண்பா "தோற்று பசிக்கில்லை சுவைபாகம்' என்றும், விநாயகபுராணம், "இனிய வுணவை மிகக் பசித்த விடத்தினுடற்குப் பொருந்தவுணின் முனிசெய் பிணிகட் கிடனின்றும்" என்றும், குசேலோபாக்கியா னம், "நண்புகூர்தரு மன்னப்பால் சிறிதல்லான் மற்றோர் நற்பா லில்லை, பண்புகூர்தரு தனையர்க் கெஞ்ஞான்றும் பசிதீர்ந்த பாடு மில்லை" என்றும், திருவிளையாடற் புராணம், "அடங்காத பசியினர் போலன்னைமுலைப் பாலருந்த, மடங்காத பெருவேட்கை மகவு போற் புறப்பட்டார்" என்றும், "பெரும்பசியாற் சுட்டிட நான்மிக மெலிந்தேன்" என்றும், "தவனமாப் பசியுடையவன்—பசிநோய் தொடுத்தவன்' என்றும, "கடும்பசியுடையேனன்னே பிட்டிடு கடுதி யென்ருர்." என்றும், "குற்றமிக்கவிக்கென்று கூறலுங், சுற்றிலா ஞெனடுங்காலம் வெம்பசி, புற்றவன் கலத்துண்ணு மெல்லைகைப் பற்றவாடினுன் பண்புபற்றினுன்" என்றும், "குடைக்காடன் பசிக் கன்னக்குழிபருந்தி வேட்கைபறக் கொடுத்தகங்கைச் சடைக் காடன்" என்றும், "முனிவர் பசித்துன்பால் வந்தே மென்ருர்"— என்றும், உலக வழக்கு, "பசித்தார் முசமபார் பாலடைக்குப் பால் வார்." என்றும், பிரபோதசந்திரோதயம், "மாய வெம்பசியைத் தீர்ப்பதற்கேது மதித்திடாமற்-கோயிலி னமுதம் புசிப்பதற்கன்றோ கொண்ட ரினையரிக்கோலம்" என்றும், அரிச்சந்திரபுராணம்,

"பனியானனைந்து வெயிலானுலர்ந்து, பசியாலலைந்த முலவா," என்றும், "கொழுந்து விட்டெரியும் பசி" என்றும், தனியன், ஆடெரிபடர்ந்த கோடயரடுப்பில், ஆம்பிபூப்பத் தேம்பசியுழல, இல்லிதூர்த்த—பொல்லாவறு முலை சுவைதொறுஞ் சுவைதொறும் பாற்காணமல்"—என்றும், சீகாளயுத்தி புராணம், "என் பெருந்துணையாய் நின்ற விறைவனுர் மிகப் பசித்தார்" என்றும், "என்று சாலவுமிரங்கி யெரிபசிமிகாத முன்னர் சென்றொரு கணத்துட்கொண்டு திரும்புவ மெனத்துணிந்து, குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணிவிளக்கே யெந்தாய், யுன்றழப் பசித்தணிப்ப வுறுசுவை யிறைச்சிகொண்டே" என்றும்; "உழுந்துருள் பொழுதின் மீள்வன், ஒருகண மேனுந்தாழேன்" என்றும், "என்னுயிருக்குத் துணையாவாரெரி வெம்பசியா விளைத்தாரோ" என்றும், "தீயேன் வரவுதாழ்த்தலினுற் கன்றுபசியால் வருதினையே" என்றும் மாயூரபுராணம், "எரிதாவி யெழுந்ததெனப்பசியழலினுயங்கினுன்" என்றும், காசிகண்டம், "பெருகுவெம் பசிநோய் பற்றப்பேதுறவோடும் வைகி—" என்றும், "வருபசி பிணிமுதூர வயிறெரிதவழ்ந்து பொங்கி" என்றும், கூர்மபுராணம், "சொன்னமாயிர மந்தணர்க்கீபினுஞ் சுடிகைவாளரா நெற்றி, மன்னுபூதலம் வலங்கொடு திரியினும் வளர்சிகையழனுப்பட், டுன்னிமாதவம் புரியினும் பசியினுற்றளர்ந்ததுயர்தீர, வன்னமீபவர் பலத்தினிலாயிரத் தொன்றும் வந்தடையாதே" என்றும் "திருப்பெருந்துறைப்புராணம" "பிறிதெவனமக்கு வேண்டு முறுபசிக் கன்னந் தம்மினுது வொன்றே போதுமென்றூர்" என்றும், "குறைபசி யென்றடைந்த குணத்தரை விலக்கினேமோ" என்றும்,—"நிரம்புவானவர் வயிற்றினுறைபசி யவித்து வாழ்ந்தா ரொள்ளழற் கருமத்தாலே" என்றும், சிவராத்திரிபுராணம்" "தீயவெம்ப பசி கனற்றவோர் தெருத்தனிலிருந்து" என்றும்,— "வெந்நோய் பசிவருத்திட வீழ்ந்தான்" என்றும், வளையாபதி, "குலந்தருங்கல்வி கொணர்ந்து முடிக்கு மலந்த கிளைக ளழிபசிநீக்கும்" என்றும், மகாராஜா துறவு"—"முந்து பசிநோய்—துன்பம்" என்றும், பட்டினத்தார், "பூணும்பணிக்கல்ல பொன்னுக்குதானல்ல பூமிதனைக் காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்ல நற்காட்சிக்கல்ல சேணுங்

கடந்த சிவனடிக்கல்ல வெஞ்சிந்தைகெட்டு சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே" என்றும், கட்டுச்சியிற் சாலவுமாதி பசிதாகம்," என்றும் "மெத்தப்பசிக்குதையா பாவி யேன் பாழ்வயிற்றைப்பற்றி இசிக்குதையா காரோணரே" என் றும், ஞானவிளக்கம் " காமாதியாலுங் கடுவெம்பசியாலும்"— என்றும் உபதேசவுண்மை, "பாழான மாயையினுற் பட்ட கதை மெத்தவுண்டு பாழ்த்த நெஞ்சால், வீழாத படுகுழியில் வீழ்ந்திளைத்து நெறியறியாவீணர் தம்மைத், தாழாது தாழ்ந் தொரு சாண் வயிறு வளர்த்திடுந் தொழிலே தலைமையாக்கொண் டாழாத நிரகிற்காளானேன் பரமனே யருள் செய்வாயே" என் றும், மூதாட்டியார்" "ஐயமிடுமினறநெறியைக் கைப்பிடிமின், இவ்வளவேனு மனத்தை யிட்டுண்மின்" என்றும், வைராக்கிய சதகம், "விடலரும்பசிநோய்" என்றும், இராமலிங்கசுவாமி திருவ ருட்பா" "சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடி லொருவன்றுன்னு ற்றவமெலாஞ் சுருங்கி, யாற்றிலே கரைத்த புளியெனப் போ மென்றறி ஞர்களுரைத்திடல் சிறிதும் போற்றிலேனுன்னைப் போ ற்றிலேன் சுவையிற் பொருந்திய காரசாரஞ் சேர், சாற்றிலே கலந்த சோற்றிலே யாசைதங்கினே னென்செய்வே னந்தோ." என்றும "கரும்பசைக்கு மொழிச்சிறியர் கன்மனத்திற் பயின்று பயின் றிரும்பசைக்கு மனம் பெற்றேன் யானேவிவ் வேழைகடம், அரும்பசிக்குமருந்தளிப்பேனந்தோவிங்கென்னாலே, துரும்பசைக்க முடியாதே சோதிநடம் பெருமானே." என்றும், திருக்காளத்தி புராணம், "வந்தனை பண்ணி யெந்தாய் வாடினை பசியா லென்றும்" என்றும், "அழிபசிதாகமோடதிதி யுண்ணுறின், விழைவொடு மவன்றனை யாவன் வெம்பசி யொழிவுற வித்தவனவனுறும் பலன் றழுவியித்துணை யெனுஞ் சங்கை யில்லையே," என்றும், பெரிய புராணம், "வழிவரு மிளைப்பினேடும் வருந்திய பசியினாலே அழி வுறுமைய னென்னு மன்பினிற் பொலிந்து சென்று." என்றும், "உண்ணீரின் வேட்டையுடனுறு பசியான் மிகவருந்தி, பண்ணீர் மை மொழிப்பரவை கொழுநர் வரும் பாங்கர்க் கண்ணீடு திரு நுதலார் காதல் வரக் கருத்தறிந்து, தண்ணீரும் பொதி சோறுங் கொண்டுவழிச் சார்கின்றார்" என்றும், "நீர்பசித்திருக்க விங்கு

நிற்கவுங் கில்லேனென்று" என்றும், "இனிய வெம்பிரானுர் சாலப் பசிப்ப ரென்றிரங்கி யேங்கி" என்றும், "மற்றவர் மனைவியாரு மக்களும் பசியால் வாடி, யற்றை நாளிரவு தன்னிலயர் வுறத்துயி லும் போதில்" என்றும், "நாதன்றனடியாரைப் பசிதீர்ப்பே னென நண்ணி" என்றும், "மூப்புறு மத்தளர் வானு முதிர்ந்து முருகிய வேட்கைத், தீப்பசியினிலை யானு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்" என்றும், "தணந்தபசி வருக்கத்தாற் றம்பிரான் றிருவாயிற், புணர்ந்தமதிற் புறத்திருந்தார்" என்றும், "வன்றொண்டர் பசி தீர்க்கமலையின் மேன் மருந்தானுர்" என்றும், "மெய்ப்பசி யான்மிக வருந்தியிளைத்திருந்தீர் வேட்கைவிட, இப்பொழுதே சோறிரந்தி ங்கியானுமக்குக் கொணர்கின்றேன்" என்றும், தீர்த்தகிரிபுராணம் "அன்னமும் பகிர்ந்திடா வுன்னுக்கையைக் காக்கை தீண்டா, பின் னொரு கழுகுஞ் சேரா ஞாளியும் பிணங்கிவாரா, வன்னியுங் கலவாதண்டவனத்து வளரா நிற்கும், அன்னது பசிநோய் தீர வருந்தி வானுலகையாள்வாய்" என்றும், "கன்னிதான நெடும்புவி யுங்கலையு மாவுங்கனப்பரியும், இன்னதான மணித்தேரும் வேண்டும் பணியுமென் பழனச், சொன்னதான மற்றுமுள சுகிர்தயாக பலன் களெல்லாம், அன்னதான பலத்தை நிகராமோ வாகாதாகாதே" என்றும், "உண்டியுதவுங் கொடைபோலே யுலகிற் சிறந்த கொ டைகாணேன்" என்றும், காஞ்சிபுராணம், "நிச்சலு மன்னதான நிகழ்த்துவோ ரெய்தும் பேறு, பச்சிளங் கொடியினேர் பாற்பகவ னே யறியுமன்னே" என்றும், காசிரகசியம், "பசிவயிற்றெழுந்த தென்னே படர்ந்தது பகர்தி யென்றான்" என்றும், திருவாதவூரடி கள் புராணம், "பீடை கொண்டயர்வாள் காணப் பெரும்பசியுடை யர் போல" என்றும், "இரும்பசியுடையேனன்னே யினிய பிட்ட ளிப்பையாகில்" என்றும் "மாற்றரும் பசியை யின்னே மாற்றினை" என்றும், மணிமேகலை, "பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென வாதிரை யிட்டன ளாருயிர் மருந்தென, (ஆருயிர் மருந்து—அன் னம்) என்றும், "குடிபிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ, நாணணிகளையு மாணெழில் சிதைக் கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யெ ன்னும் பாவி" என்றும், "நாலடியார், உள்கூர்பசியா லுழை நசைஇச்

சென்றார்கட், குள்ளூரிருந்து மொன்றுற்று தான்—உள்ளூர், இருந் துயிர் கொன்னே கழியாது தான்போய், விருந்தினனாதலே" நன்று என்றும், திருமுருகாற்றுப்படை, "நளிமலைச்சிலம்பி னன்னகர் வாழ்த்தி" என்றும், (நச்சினார்க்கினியர், செறிந்த மலைப்பக்கத்திலு ள்ள நல்ல ஊர்களைப் பசியும், பிணியும், பகையும் நீங்குக வென்று வாழ்த்தி யென்றார். குறிஞ்சி நிலம், மருதநிலச் சார்பா புள்ளது.) பெரும் பாணாற்றுப்படை, "பழம் பசிகூர்ந்த வெம்மிருபே ரொக்க லொடு, வழங்கத்தவா அப்பெருவளனெய்தி" என்றும், "தொல் பசியறியாத் துளங்கா விருக்கை" என்றும், விவேகசிந்தாமணி, "ஆபத்திற்குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னம்—பயனில் லையிவ்வேழுந்தானே" என்றும் கூறுதலால் அன்னதான மிக்ச் சிரேட்ட மெனவே யூசிக்க வேண்டுவதாவசிகமேயாம்.

---

## அருள்,

ஸ்ரீ தாயுமானவர், "தானந்தவந் தருமஞ் சந்ததமுஞ் செய் வர் சிவ ஞானந்தனையணையநல்லோர் பராபரமே" என்பதனல் தானத்தினால் தான் அருளைப்பெற வேண்டும். மரமுங்காயும். மணியு மொளியும், பூவுமணமும், எள்ளுமெண்ணெயும் போல இறைவனொடு இருக்கும் ஞானமே அருள் என்று கூறப்படும். ஆன்றோர்கள் திருவாய் மலர்ந்தருளிய நன்னூல்களைப் பன்னிப் பன்னியாராய்ந் துணரு முதிர்ச்சியினால் தான் அவ்வருட்பேற்றை எளிதிலடைய வேண்டும். பல கோடி ஜெங்மாந்தரங்களிற் செய்து வந்த புண்ணிய முதிர்ச்சியினால் அரும்பெரும் அருட்பேற்றை யடைய வேண்டும்.

---

## செல்வநிலையாமை

செல்வநிலையாமையை யுணர்ந்து அவ்வழிதன் பாலத்தூய பொருட் செல்வம் உள்ள போதே தானதருமங்களைச் செய்து இகபரசாதன மாயுள்ள திருவருட்பேற்றை யடைய வேண்டும். சிந்தாமணி, "அம்பொற் கலத்துளடு பாலமர்ந்துண்ணு வரிவை யந்தோ, வெம்பிப்பசி நலிய வெவ்வினையின் வேறு யோரகல்கை

யேந்திக், கொம்பிற் கொளவொ சிந்து பிச்சை யெனக்கூறி நிற்பாட்கண்டு, நம்பன்பின் செல்வ நமரங்கா ணல்லறமே நினைமின் கண்டீர்'' என்றும், திருக்குறள், "கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம், போக்குமது விளிந்தற்று'' என்றும், ஆன்றோர் அறிவித்தமை நன்குணர் தற்பாற்று.

## யாக்கை நிலையாமை

யாக்கை நிலையாமையை யுணர்ந்து அவ்வியாக்கை யுள்ள போதே தானதருமங்களைச் செய்தல் வேண்டும். தேவாரம், "நடலை வாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர், சுடலை சேர்வது சொற்பிரமாணமே, கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டா லுடலினர் கிடந்தூர் முனிபண்டமே'' என்றும், செவ்வந்தி புராணம், "மின்போலழியும் வயிற்றுமை வடிவாயழியு மெய்யுருவாய், முன்போலழியும் பிறந்தழியுமடவாருடனை முயங்கிய தன்பின் போயழிபு நரைத்தழியும் பேய்போற் றிரிந்து பெயர்ந்தழியும், பொன்போல் வளர்த்து மிவ்வுடல நிலையாதழிந்து போய்விடுமே'' என்றும், சிவஞான சித்தியார், "கருவினுளழிவதாயும் கழிந்திடா தழிவதாயும், பரிணமித் தழிவதாயும் பாலனுபழிவதாயும், தருணனுயழிவதாயுந் தானரைத் தழிவதாயும், உருவமே யழிவே யானு லுள்ளபோதே பாருய்ய'' என்றும். பாகவதம், "கனவைப் போலவுங் கானலினீருடன், தனிசெயிந்திர சாலத்தைப் போலவு, மனனின் கற்பனை யான்வரும் யாக்கையை, வினையிற் கட்டற மெய்யெனற் பாலதோ,'' என்றும், பிரமோத்தர காண்டம், "பண்டைவாசனை தொக்க பயிற்சியாற், கொண்டகாய நிலையெனக் கொள்வரோ, அண்டரேனும் பிறப்புளதா மெனின் விண்டு காய மிறப்பது மெய்யரோ'' என்றும், திருக்குறள், "உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு'' என்றும் கூறுதலால் தேகநிலையாமை நன்குபுலப்படுகின்றது.

---

## ஈகை.

யாவற்றிற்கும் மேலான குணம் ஈகை யாதலினால், நல்ல குடியிற் பிறந்தவர்கள் வறுமையடைந்த காலத்தும் இரப்பவர்

கட்கு இல்லை யென்னுமல் ஈவார்கள். நல்வழி, "ஆற்றுப் பெருக் கற்றடிசுடு மந்நாளுமவ்வா, றூற்றுப்பெருக்கா லுலகூட்டு—மேற் றவர்க்கு, நல்ல குடிபிறந்தார் நல்கூர்ந்தா ராலு, மில்லையென மாட்டாரிசைந்து" ஆகையால் "ஐயமிட்டுண்" என்னும் வாய்மை யைக் கடைப்பிடித் தொழுகலே இன்றியமையாக் கடனாகும். திருமந்திரம், "ஆர்க்குமிடுமினவரிவ ரென்னன்மின், பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின், வேட்கையுடையீர் விரைந்தொல்லை யுண்ணன் மின், காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே" என்றும், கூறுதலாலே நமக்குச் சுதந்தரமில்லாத செல்வத்தை இடைநடுவே இறைவன் தந்தென வெண்ணி இரப்ப வர்க்கு இல்லை யென்னாது இயன்றவளவு கொடுத்து உபகரிக்க வேண்டும். பட்டினத்தடிகள், "பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மே, லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவே, குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொ டுக்கறியா, திறக்குங் குலாமருக் கென். சொல்லுவேன் கச்சியே கம்பனே" என்றும். "நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம் புரியுந், தாயார் வயிற்றினராய்ப் பிறந்துபின் சம்பன்னரா ய்க், காயா மரமும் வறளாங் குளமுங் கல்லாவு மென்ன, ஈயா மனிதரை யேன்படைத்தாய் கச்சி யேகம்பனே" என்றும், தனி யன், "ஈயாத புல்லரிருந் தென்ன போயென்ன வெட்டிமரங், காயாதிருந் தென்ன காய்த்துப்பல னென்ன" என்றும், விநாயக புராணம், "வைத்து பொருளைத்தானுகரான் வழங்கானிருந்துஞ் செத்தானே செத்த பின்னரென் செய்வான் றீயார் கொள்வரீட்டு தலான், மெத்தும் வருத்த மேயன்றி வேறென்றில்லை யாதலினாற், பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசித்து வழங்கலே யாகும்." என்றும், நன்னெறி, "பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு, பிறர்க்குதவியாக்குமவர் பேறும்—பிறர்க்குதவி, செய்யாக் கருங்கடனீர் சென்று புயன் முகந்து, பெய்யாக் கொடுக்கும் பிறர் க்கு" என்றும், இராமாயணம், "மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர் சண் மாயா, தேந்தியகை கொடிரந்தவ ரெந்தாய், வீந்தவரென்பவர் வீந் தவரேனு, மீந்தவரல்ல திருந்தவர் யாரே." என்றும், கூறுதலா

லே மன்னுயிரைத் தன்னுயிர்போல் மனமிரங்கி யீதலே நல்லற மாகும். பதிபசுபாச விளக்கம், "கலையெலா முணர்ந்தானேனுங் கரிசறத் தெளிந்தானேனு, மலையென வுயர்ந்தானேனு மனமயல கன்றானேனு, முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனு, மிலகிய விரக்கமின்றே லெழுநர கடைவனன்றே" என் றும் கூறுதலால் மனமிரக்க முள்ளவர்க ளாயிருக்க வேண்டும்.

---

## வினைவழி.

இருவினைப்பயனால் வந்தெய்தும் "பெருமையுஞ் சிறுமை யுந் தான்றரவருமே." என்பதற்கிணங்கத் தத்தம் வினையள விற் கேற்றபடி யுண்டாகும். கந்தபுராணம், "தீங்குவந்தடையுமாறு நன்மைதான் சேருமாறுந், தாங்கள் செய்வினையினாலே தத்தமக் காயவல்லா, லாங்கவை பிறரால் வாராவமுதநஞ் சிரண்டினுக்கு மோங்கிய சுவையின் பேதமுதவினர் சிலருமுண்டோ" என்றும், பேரூர் புராணம், "நன்னலம் பயப்பதுண்டேற் றீயவு நல்லவாகும், சென்னலமிழப் பதுண்டே னல்லவுந் தீயவாகு. மின்னவால் வினை யினுக்க மெனினிடை யேதுவான, வன்னவர்தமை நோவ வழக் கில்லையந்தோ வந்தோ" என்றும், நீதிவெண்பா, "தானே புரிவினை யாற் சாரு மிருபயனுந், தானே யனுபவித்த றப்பாது—தானாறு, கோடி கற்பஞ் சென்றாலும் கோதையீர் செய்தவினை, நாடிநிற்கு மென்றார் நினை" என்றும், அறிநெறிச்சாரம், "தானே தனக்குப் பகைவனு நட்டானுந், தானே தனக்கு மறுமையு மிம்மையுந், தானே தான் செய்த வினைப்பயன் றுய்த்தலாற், றானே தனக்குக் கரி" என்றும் கூறுதலால் மனமிரங்கி எத்தகைய ராயினும் பசி யென்ற போதே பரிந்து வந்து அவர்க்கு உற்றபசிநோயைத் தீர்ப் பதே பெரும் புண்ணியமாகும். முத்திவழி காட்டுதற்கு அன்ன தானமே துணையாய் நிற்கும்.

---

## வழித்துணை.

முடிவில் வழித்துணையாய் நிற்பது தான தருமத்தாலாய புண்ணியமேயாம். சிவதருமோத்தரம், "பாம்பழல் வாயினூற்

பற்ற மண்டுகெந், தேம்பிடுந் துயருறுஞ் சீவன்றேயுநாள், ஓம்பிடவ ல்லரே வுற்ற மற்றையார், போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்'' என்றும், காசிரகசியம், “புண்ணியம் புரிந்தார்க் கெல்லாம் புகழ் மிகு சாந்தனுகி, யண்ணிய நயமேன் மேலு மணைதரப் பொலியா நிற்போம்'' என்றும் கூறுதலால் தானதருமங்களால் வரும் புண்ணியபலனே பெரிதுந்துணையாய் நிற்கும். நிராயுத பாணியாய் நின்ற கன்னனுக்குத் துணை நின்ற தருமதேவதை எதிர்த்து வந்த பாணங்களை யெல்லாம் கவுளீகரணம் செய்வதை யுணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணன் சூட்சியால் கன்னன் அடைந்திருந்த புண்ணியத்தை யாசிக்கத் தத்தஞ் செய்ததாக ஏற்படுவதால் தருமந்தலை காக்கு மென்பது நிச்சயமாயிற்று. வில்லிபாரதம், “ஒவிலாதியான் செய் புண்ணிய மனைத்துமுதவினேன் கொள்கை நீ யுனக்குப், பூவில் வாழயனு நிகரல வென்றுற் புண்ணிய மிதனிலும் பெரிதோ'' என்றும் கூறுதலால் நன்குணர்வதாயிற்று. பின்னும் விரிகிற் பெருகுமென விடுத்தாம்.

---

## முடிவு.

இங்ஙனம் கூறப்பட்ட வற்றால் புவியே விசேடமுடைத்தென்றும், அப்புவியின் கண்ணுள்ள மானிடரே மூன்று பயன்களுக்கும் அருகரென்றும், ஏனைய பிறப்புக்களுள்ளும் மேம்பட்டு விளங்குவது மானிடப் பிறவியே யென்றும், அடைவதற்கரியதாய இம்மானிடப் பிறவியிலேயே ஆன்மலாபத்தை யடைய வேண்டுமென்றும், தேகமுஞ் செல்வமும் நித்தியமல்ல வென்றும், காலமுள்ள போதே தானதருமங்களைச் செய்து பேறுபெற்றுய்ய வேண்டு மென்றும், பல வேறுவகையான தானதருமங்களினுள் அன்னதானமே மிகச் சிறந்த தென்றும், அவ்வன்னதானம் பசிப்பிணியை நீக்கி எல்லாவற்றிலும் உயர்ந்த சுகத்தைக் கொடுக்கு மென்றும், அன்னதானம் வேதாகமோபநிடதங்களிற் சிறப்பித்துக் கூறியுள்ள தென்றும், அதனைக் கடைப்பிடித் தொழுகலே நம்மனோர்க் கின்றியமையாக்கடனு மென்றும், எல்லாப்பிணிகளினும் பசிப்பிணி கொடிய தென்றும் நன்கு விளங்குமாதலால் எத்தகைய சிரமப்பட்டாயினும் ஏழைகளிடத்து மனமிரங்கி யுள்ளன்போடு அன்னதானஞ் செய்வதே இகபர சாதனங்கட்கு ஏது வாகும் என்பதைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டுமென்க.

“வறியார்க் கொன்றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து.''

சுபம். சுபம்.